## 1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப் படுத்தியுள்ள முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்துள்ள 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் ஏற்பாடுகளின்படி எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்மீது எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் மேற்கொள்ளப்படுகிறது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக் கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்**

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றறை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மைக்கு ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளர் அதிபதியின் பொறுப்பு**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை

மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மை-யானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கிட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| தொடர்புடைய நியமங்களின் தொடருடன் இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 2 பிரகாரம், காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும்போது முதலீட்டு செயற்பாடுகளில் உற்பத்தியாகும் நிதிப் பாய்ச்சலின்கீழ் நிலையான வைப்புகளுக்கு பணத்தால் கிடைக்கப்பெற்ற வட்டி வருமானமான ரூபா.51,511,527 ஐ குறிப்பிடுவதற்குப் பதிலாக ஆண்டுக்கு எற்புயைடதாக ரூபா. 51,839,355 ஆன வட்டி வருமானம் காட்டப்பட்டிருந்தது. | மொத்த வட்டி வருமானம் ஆகிய ரூபா. 51,839,353 முதலீட்டு செயற்பாடுகளின்கீழ் நிதி கிடைக்கப்பெறுதலாக காட்டப்பட்டிருந்தல் செவ்வை-யானதாகும். மொத்த வட்டி வருமானத்தில் உள்ள மீள வைப்புகளுக்கு சேர்க்கப்பட்டு முதலீட்டு தொகையான ரூபா.19,945,509 ஐ முதலீடு-களின்கீழ் நிதி ஓட்டமாக குறிப்பிடப்பட்டள்ளது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 பிரகாரம் நிதிப் பாய்ச்சல் கூற்று தாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன்படி பணிக்கொடை செலுத்துகையில் ஆயுட்காலம் கணிப்பிடும் முறை (Actuarial method) பயன்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பினும், நிறுவனத்தின் பணிக்கொடை ஒதுக்குவதற்குகாக பணிக்கொடை பெறுமதிக்கு அதிகமான பணிக்கொடை செலுத்துவறத்கு நிறுவனத்திற்கு நேரிட்டிருந்தது. உதாரணமாக 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1 ஆந் திகதி சேவையிலிருந்து விலகிச் சென்ற அலுவலரின் பொருட்டு மேற்கொண்ட பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா. 45,316 ஆனதுடன், அவருக்கு செலுத்தப்பட்ட பணிக்கொடை படி ரூபா. 250,000 ஆகும். | பணிக்கொடை செலுத்தும் பொருட்டான ஒதுக்கீடுகளை கணக்கிடுவதற்காக நிறுவனத்தால் இலங்கை கணக்கீட்டு நியமம்மூலம் காட்டப்பட்டிருந்த சூத்திர முறை பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தற்போது அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 வெளியிடப்பட்டுள்ளதால் அந்த நியமத்திற்கு ஒழுங்கமைவாக எதிர்காலத்தில் பணிக்கொடை ஒதுக்கீடு கணிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன்படி பணிக்கொடை ஒதுக்கீடு கணிப்பிடுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆந் திகதி ரூபா. 78,500 இற்கு அகற்றப்பட்ட கிரயம் ரூபா.1,340,000 ஆன சொத்துக்கள் தொடர்பில் கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் கணக்குகளி-லிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | அகற்றப்பட்ட சொத்துக்களில் கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் அந்தக் கணக்குகளிலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கு எதிர் வரும் ஆண்டிலிருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அகற்றப்பட்ட சொத்துக்களுக்கு எற்புடையதாக கிரயம் மற்றும் திரண்ட தேய்மானம் கணக்குகளிலிருந்து அகற்றுவறத்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) வியாபார நிருவாக முதுமானி 2017 மற்றும் அரசாங்க நிருவாக முதுமானி 2017 ஆகிய பட்டப்படிப்புகளுக்கு எற்புடையதாக கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் ஒழுங்குமுறயையில் ரூபா.2,456,250 மற்றும் ரூபா.75,000 அதிகமாகவும், வியாபார நிருவாக முதுமானி 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புயைடதான கற்கைநெறிக்கு உரிய பிற்போடப்பட்ட வருமானம் ரூபா. 287,500 குறைவாகவும், கணக்கிடப்பட்டிருந்ததுடன், சுங்க மற்றும் சர்வதேச வியாபாரம் தொடர்பான நிருவாக முதுமானி கற்கைநெறிக்கான பிற்போடப்பட்ட வருமானம் ரூபா.59,375 ஐ கணக்குகளுக்கு எடுக்கப்படவில்லை. | கற்கைநெறி கட்டணங்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகளுடன் இணங்குகின்றேன். உரிய செவ்வைப்படுத்தல்கள் மேற்கொள்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வருமானத்தை செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கிடுதல் வேண்டும். |
| (இ) சம்பத் வங்கியில் பேணிச் செல்கின்ற வெளிநாட்டு நாணயக் கணக்கில் மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் இருக்க வேண்டிய மீதி, செலாவணி மாற்றத்தின் பின்னர் ரூபா. 1,749,812 ஆதல் வேண்டுமாயினும், அது ரூபா.63,514 ஆக கணக்கிடுதல் காரணமாக நிதி நிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்கள் மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றில் நிதி மீதி பகுப்பாய்வு ரூபா.1,686,298 ஆல் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | உரிய கணக்கீட்டு குறைப்பாடுகள் 2019 ஆம் ஆண்டில் செவ்வையாக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ கணக்குகளை அங்கீகரிப்பதற்கு முன்னர் அதன் கணிப்பீடுகளின் செவ்வைத்தன்மை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், பேரேடு கணக்குகளின் மீதி நிதிக் கூற்றுகளில் செவ்வையாக குறிப்பிடுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக 09 கற்கைநெறிகளில் கிடைக்கப்பெற வேண்டிய கற்கைநெறி கட்டணங்கள் ரூபா. 23,674,874 ஐ முறையான அனுமதியின்றி மீளாய்விற்கான ஆண்டில் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. மேலும், உரிய பதிவழித்தல்கள் உரிய நிதி செயலாற்றுகை கூற்றில் குறிப்பிடுவதற்குப் பதிலாக பல்வேறு செலவினங்களின்கீழ் காட்டப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாக பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டதன் பின்னர், நிலுவையான கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் பதிவழிக்கப்பட்டுள்ளது. | புத்தகங்களிலிருந்து அகற்றுவறத்காக முறையான அனுமதி பெற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அவற்றை நிதி செய-லாற்றுகை கூற்றில் குறித்துரைத்து காட்டுதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

---

பின்வரும் அவதானிப்புகள் மெற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கான தொடர் | இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்-களுக்கான தாபன விதிக்கோவை<br>(i) 9 ஆவது அத்தி-யாயத்தில் 5.1 (அ) பிரிவு மற்றும் 7 ஆவது அத்தி-யாயத்தில் 21.1 பிரிவு | நிருவாக தரங்களில் அலுவலர்களுக்கு மேலதிகநேர கொடுப்பனவு பெறுவதற்கு உரித்து இல்லையெனவும், லீவு நாட் சம்பளம் கணக்கி-டுகையில் ஒருநாள் திரட்டிய சம்பளத்தை அடிப்படையாகக் கொள்-ளுதல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருப்பினும், அந்த பிரிவுகளுக்கு முரணாக முகாமைத்துவ சபையின் அனுமதியுடன், வேறு கணக்கிடும் முறையை அடிப்படை-யாகக்கொண்டு நிறுவன- | நிறுவனத்தின் போதனைகளை நடா-த்தல் மற்றும் ஏனைய கற்கை நிகழ்ச்சித்-திட்டங்கள் மேற்-கொள்ளப்படுவது வாரத்தில் மு.ப 5.00 தொடக்கம் இரவு 9.00 மணி வரையும், வார இறுதியில் மற்றும் பிரசித்தி பெற்ற லீவு நாட்களிலும் ஆகும். உரிய கற்கை-நெறிகளின் | பலக்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்காக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு ஒழுங்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | த்தின் சிரேட்ட உதவி பதிவாளருக்கும் முறைமை பகுப்பாய்வாளர் அலுவலருக்கும் மீளாய்விற்கான ஆண்டில் மொத்தம் ரூபா. 1,558,200 ஆன படி செலுத்தப்பட்டிருந்தது. | பொருட்டு அரசாங்கத்தின் மற்றும் தனியார் துறயையின் முகாமைத்துவ தரங்-களின் அலுவலர்கள் அதிக எண்ணிக்-கையினர் பங்குபற்றி-னார்கள். அந்த காலவெல்லைக்குள் வசதிகளை வழங்குதல், பரீட்சைகளை நடாத்தல், அடங்கலாக ஏனைய நடவடிக்கைகளின் மேற்பார்வைக்காக இவ் அலுவலர்களை சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது. | |
| (ii) 2 அத்தியாயத்தில் 26.1 பந்தி | நிதி ஆண்டு இறுதி திகதியில் நிறுவனத்திற்குரிய எல்லா பொருட்களும் நிலையான சொத்துக்களும் தொடர்பில் மீளாய்வு சபையால் சரி பிழை பார்த்தல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டுக்காக நூலகப் புத்தகங்கள் தொடர்பாக மீளாய்வு மேற்கொள்ளப்படவில்லை. | மீளாய்விற்கான ஆண்-டுக்காக நூலகப் புத்தகங்கள் தொட-ர்பான மீளாய்வு மேற்கொண்டு உரிய அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும். | மீளாய்வு அறிக்கையில் பிரதி கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | .இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை<br>நிதி ஒழுங்குவிதி 371 (2) (ஆ) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) பதவிநிலை அலுவலர்களுக்கு மட்டும் நிமித்த கட்டுநிதி முற்பணம் வழங்க முடியுமாயினும், பதவிநிலையல்லாத பதவிகளின் அலுவலர்களுக்கு 16 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா. 1,373,000 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>(ii)நிமித்த கட்டுநிதி முற்பணம் வழங்க முடியுமான ஆகக்கூடிய உச்ச எல்லையான ரூபா. 100,000 விஞ்சி அலுவலர்களுக்கு 07 சந்தர்ப்பங்கிளல் மொத்தம் ரூபா.1,318,000 அன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | நடைமுறை நிலைமைகளை கவனத்தில்கொண்டு பதவி-நிலையல்லாத பதவி-களை வகிக்கும் அலுவலர்களுக்கு முற்-பணம் வழங்கப்படினும், அந்த முற்பணம் பயன்படுத்தப்படுவது சம்பந்தப்பட்ட அலுவ-லரின் நேரடி மேற்பார்வையின் கீழ் ஆகும். பணத்தால் முற்பணம் வழங்கப்படுவது அத்தி-யாவசியமான சந்தர்ப்ப-ங்களில் மட்டுமாகும். முற்பணம் தேவைப்படும் பணிக்கமைவாக ஆகக்கூடிய உச்சவெல்லை விஞ்சுதலும் ஏற்படுகின்றது. முற்ப-ணத் தொகையில் 70% வழங்கப்பட்-டிருப்பது முகாமை-த்துவக் குழுக்கள், கணக்காய்வு குழுக்கள் மற்றும் கற்கை சபைகளின் கூட்ட-ங்களில் உறுப்பி-னர்களின் வருகைகொடுப்பனவாக ஆகும். | நிமித்த கட்டநிதி முற்பணம் வழங்கும் ஒவ்வொரு சந்தர்ப்-பத்திலும் நிதி ஒழுங்குவிதி 371 மற்றும் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் தகிதிய 3/2015 ஆம் இலக்க அரச சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடி-க்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

1.7 **குத்தகை ஒழுங்குவிதிகளுக்கு ஒழுங்கமையாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| உரிய காலப்பகுதியில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி செலுத்தாமை காரணமாக 2016 ஆம் ஆண்டுக்காக ரூபா. 1,202,561 ம், 2017 ஆம் ஆண்டுக்காக ரூபா. 408,565 ம் என்ற வகையில் அபராதப் பணம் செலுத்துமாறு இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் நிறுவனத்தை பணிக்கப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் பயன்படுத்துகின்ற கணினி தகவல் முறைமை காரணமாக நெகிழ்வுத் தன்மையுடன்கூடிய அடிப்படை-யின்றி இந்த அபராதப் பணம் கணக்கிடப்பட்டுள்ளது. உரிய அபராதப் பணத்தை விடுவிக்குமாறு தற்போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் வேண்டு-கோள் முன்வைக்கப்பட்டுள்ளது. | நியதிச் சட்ட கொடுப்பனவுகளை உரியவாறு மேற்-கொள்ளுதல் வேண்டும். |

2. **நிதி மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவு**

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைவு ரூபா. 137,877,096 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டில் மிகை ரூபா. 122,461,566 ஆகும். அதன்படி நிதிசார் விளைவில் ரூபா. 15,415,530 ஆன வளர்ச்சி காணப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் பல்வேறு செலவினம் ரூபா. 22,323,889 ஆல் அதிகரித்திருப்பினும், கற்கைநெறி கட்டணங்களின் வருமானம் ரூபா.39,346,575 ஆல் அதிகரித்தல் இந்த வளர்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களில் செல்நெறி பகுப்பாய்வு

---

கடந்த ஆண்டில் ரூபா. 1,350,985 னே பல்வேறு செலவினம் மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 23,674,874 ஆகியது. கடந்த பல ஆண்டுகளாக கிடைக்கப்பெற வேண்டிய கற்கைநெறி கட்டணங்கள் பல்வேறு செலவினங்களின்கீழ் பதிவழித்தல் காரணமாக கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் பல்வேறு செலவினம் 1,652% ஆல் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

---

(அ) நடைமுறை விகிதாசாரம்

மீளாய்விற்கான ஆண்டில் மொத்த நடைமுறை சொத்துக்கள் ரூபா. 674,742,633 ம், நடைமுறை பொறுப்புகள் ரூபா. 93,071,479 ம், ஆகியதால் நடைமுறை விகிதாசாரம் 7.24 : 1 ஆனதுடன், கடந்த ஆண்டில் அந்த விகிதாசாரம் 5.07 : 1 ஆக நிலவியதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) உடனடி விகிதாசாரம்

மீளாய்விற்கான ஆண்டில் மொத்த திரவத் தன்மையிலான சொத்துக்கள் ரூபா. 661,166,468 ம், நடைமுறை பொறுப்புகள்ஜ் ரூபா. 93,071,479 ம், ஆகியதால் உடனடி விகிதாசாரம் 7.10 : 1 ஆனதுடன். கடந்த ஆண்டில் அந்த விகிதாசாரம் 5 : 1 ஆக நிலவியதாக அவதானிக்கப்பட்டது.

(இ) தளம்பல் விகிதாசாரம்

- கடன் விகிதாசாரம்
  மீளாய்விற்கான ஆண்டில் பல்கலைக்கழகத்தின் மொத்த சொத்துக்களின் அளவு ரூபா. 880,559,509 ம், மொத்த கடன் தொகை ரூபா. 101,500,786 ம், ஆகியதால் சொத்துக்களுக்கான கடன் விகிதாசாரம் 11.52 % ஆனதுடன், கடந்த ஆண்டில் அந்த விகிதாசாரம் 19.05 ஆக நிலவியதாக அவதானிக்கப்பட்டது.

- கடன் உரித்து விகிதாசாரம்

  மீளாய்விற்கான ஆண்டில் உரித்து மூலதனம் ரூபா.779,058,723 ஆனதுடன், கடன் மூலதனம் ரூபா. 101,500,786 ஆகியதால் கடன் உரித்துகளின் விகிதாசாரம் 13.02 ஆனதுடன், கடந்த ஆண்டில் அந்த விகிதாசாரம் 23.54 ஆக இருந்தது.

3. **தொழில்பாட்டு மீளாய்வு**

**-----------------------------**

## 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

**---------------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) (i) நிறுவளத்தால் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட துபாய் கிளையில் ரூபா. 58.2 மில்லியன் தொகையிலான மோசடி தொடர்பாக 2009 ஆம் ஆண்டில் நிலவிய பொது தொழில்முயற்சிகள் தொடர்பான குழு அறிக்கைமூலம் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் பிரகாரம் புலனாய்விற்காக 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆந் திகதி குற்ற விசாரணை திணைக்களத்திடம் கையளிக்கப்-பட்டிருந்தது. உரிய விசாரணயையின் பொழிப்புகள் சட்டமா அதிபரிடம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கவில்லை-யெனவும். 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி மீண்டும் அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய மோசடி நிகழ்ந்து 10 ஆண்டுகள் விஞ்சுகின்ற வரை வழக்கு தொடரவில்லை என்பது அவதானிக்கப்படுகிறது. | துபாய் கிளையில் நிதி முறைக்கேடுகள் தொடர்பில் குற்ற விசாரணை திணைக்களத்திடம் ஆலோ-சனை கிடைக்கும் வரை வழக்கு தொடருவதற்கு தாமதமாகியுள்ளது. | சமப்ந்தப்பட்ட புலனா-ய்வு நடவடிக்கை-களை துரிதமாக மேற்கொள்வதற்கு தேவையான நடவ-டிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (ii)துபாய் கிளையில் கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டியவைகளின் மீதி ஒழுங்குமுறையாக ரூபா. 2,079,000 ம் மற்றும் ரூபா.11,603,217 ம் என்ற வகையில் நீண்ட காலமாக புலனாய்வின்றி நிதி நிலைமைக் கூற்றுகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன், ரூபா. 832,912 தொகையிலான வெளியீடுகளின் இருப்புகள் மீளாய்விற்கான ஆண்டு வரை பயனற்ற சொத்துக்ளாக இருந்தது. | துபாய் கிளையின் நடவடிக்கைகள் தொடர்பாக குற்ற விசாரணை திணைக்களத்தால் நடாத்தப்படும் புலனாய்வு முடிவடைந்த பின்னர் இதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | 10 ஆண்டுகளுக்கு அதிகமான காலம் இதன் பொருட்டு செலவிடப்பட்டுள்ளது. துரிதமான தீர்வுகள் வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அல்லது அரசாங்க நிருவாக அமைச்சு அல்லது பொது திறைசேரி சுற்றறிக்கை அல்லது வேறு சட்டத்திற்கு ஏற்புடையதாகவின்றி வழங்கிய முகாமைத்துவ சபை அனுமதியின்மீது மேற்கொண்ட கணக்கீடுகளின்படி நிறுவனத்தின் கல்விசாரா பணியாற்தொகுதியில் 13 அலுவலர்களுக்கு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 444,000 ஐ பிரயாணச் செலவாக வழங்கப்பட்டிருந்தது. | உரிய போக்குவரத்து படி செலுத்தப்படுவது, பொது திறைசேரியினதும், பல்கலை-க்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணக்கப்-பாட்டுடன் முகாமைத்துவ சபையால் மேற்கொள்கின்ற தீர்மானத்திற்கமைவாக ஆகும். அந்த கொடுப்பனவு பொருட்டு உரிய அனுமதி உள்ளது. நிறுவனத்தின் கணக்கிடுதல்கள் பிரகாரம் போக்குவரத்து படி சரியாக செலுத்தப்பட்டுள்ளத. | பொது திறசைெரியன் அனுமதி உள்ளதெ-னவும் கணிப்பிடுதல் சரியானதெனவும் குறிப்பிடப்படுதல் ஏற்றக்கொள்ள இய-லாது. பொது திறை-சேரியின் முறையான அனுமதி பெற்றுக்-கொள்ளப்பட வில்லை என்பதுடன் உரிய சுற்றறிக்கை ஆலோ-சனைகள் மற்றும் தாபன விதிக் கோவையின் ஏற்பாடு-களுக்கு ஒழுங்கமை-வாக மட்டும் பிரயான கொடுப்பனவுகளும் ஏனைய கொடுப்பன-வுகளும் செலுத்தப்பட்டுள்ளன. |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2015 ஆம் ஆண்டு செப்தெம்ர் 18 ஆந் திகதிய 3/2015ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் கீழ் அல்லது வேறு சட்டத்தின்மூலம் போக்குவரத்து படிகள் கிடைக்கள்னபபெறுவதற்கு உரித்தற்ற நிறுவனத்தின் சிரேட்ட உதவி பதிவாளர் அவர்களுக்கு ஒரு கி.மீ. தூரத்திற்கு ரூபா.40 படி | கற்கை மற்றும் நிருவாக பணியாற்தொகுதியிடம் போக்குவரத்து படி செலுத்தப்படுவது, பொது திறைசேரி மற்றும் பல்கலைக்கழக மானிய-ங்கள் அணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் | |

| | | | |
|---|---|---|---|
| | மாதமொன்றுக்கு 50,000 ம் அளவிலான போக்குவரத்து கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தத. | தீர்மா-னம் பிரகாரமாகும். அந்தக் கொடுப்கனவு பொருட்டு உரிய அனுமதி உள்ளது. | |
| (ஈ) | துபாய், தோஹா, குவேட் ஆகிய நாடுகளில் நடாத்தப்படுகின்ற வியாபார நிருவாக முதுமானி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் பரீட்சை மேற்பார்வை மற்றும் நேர்முகப் பரீட்சை நடவடிக்கைகளின் பொருட்டு அலுவலர்களுக்கு இடைநிகழ் கொடுப்பனவு செலுத்துகையில் நிதி அமைச்சினால் வழங்கிய 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதிய 01/2015/01 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆயினும் அதற்கு முரணாக 2016 ஆம் ஆண்டுக்காக ஏற்புடைய பிரயாணச் செலவுகள் செலுத்தல் தொடர்பில் 2015 ஆம் ஆண்டு திசெம்பர் 10 ஆந் திகதிய அனுமதிக்கமைவாக நாளொன்றுக்கு ரூபா.20,000ம் படி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | துபாய், தோஹா, குவேட் ஆகிய நாடுகளில் நிலவும் பட்டநிலை பின்படிப்பு கற்கை நெறிகளில் பங்குபற்றும் அலுவலர்களுக்கும் கல்வி-சார் பணியாற்தொகுதியின-றுக்கும். உணவு கொடுப்னவாக நாளொன்றுக்கு ரூபா.20,000 மட்டும் செலுத்தப்படுகிறது. உரிய சுற்றறிக்கை பிரகாரம் நாளொன்றுக்கு வெளிநாட்டு பிரயாணக் கொடுப்பனவுகள் கணக்கிடப்படுகிறது. | சுற்றுநிருப ஆலோசனைகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஊ) | 2012 ஆம் ஆண்டில் ஓய்வு பெறச் செய்வித்திருந்த நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் அவர்களிடமிருந்தும் பிரதி நிதி முகாமையாளரிடமிருந்தும் அறவிட-ப்பட வேண்டிய ஒழுங்குமுறையில் ரூபா. 2,874,482 ம் மற்றும் ரூபா.1,018,174 ம் ஆன கடன் தொகையை அறவிடுவதற்கு மீளாய்விற்கான ஆண்டில் நடவடி-க்கை மேற்கொள்ளப்படவில்லை. | ஓய்வு பெற்றுச் சென்ற ஊழயிர்களின் கடன் மீதிகள் பெற்றுக்கொள்ள்பபடுவது, ஊழயிர் சேமலாப நிதியத்தை விடுவித்துக் கொள்கின்ற போதாகும். உரிய பணிப்பாளரதும் முன்னாள் பிரதி பணிப்பாளரதும்ஊழயிர் சேமலாப நிதியத்தை விடுவித்துக்கொள்கையில் கடன் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள்பபடும். | ஓய்வு பெறுவதற்கு முன்னர் நிறுவனம், அறவிடப்பட வேண்டிய பணத் தொகையினை அறவிடப்படுதல் வேண்டும். வேறு மாற்று நடவடிக்கை-கள் இல்லாத சந்தரப்பத்தில் மட்டும் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து அறவிடப்படுதல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்விற்கான ஆண்டில் கொள்வனவு செய்திருந்த ரூபா.20,923,210 பெறுமதியிலான நுகரும் பொருட்கள் தொடர்பிலான இருப்பு கட்டுப்பாட்டு முறைகளை பின்பற்றியிருக்கவில்லை. | நுகர்வுப் பொருட்களில், மாணவர்களிடம் வழங்கிய வாசிப்பு புத்தகங்கள், மாணவர் அறிக்கை புத்தகங்கள், பிரச்சார பத்திரிக்கைகள் மற்றும் எழுதுகருவி பொருட்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. இவற்றுள் எழுதுகருவி பொருட்கள் தவிர்ந்த ஏனையவை முற்று முழுதாக சம்பந்தப்பட்ட ஆண்டில் பயன்படுத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், இது தொடர்பில் தற்போதுள்ள இருப்புக் கட்டுப்பாட்டு முறையை ஒழுங்கு முறையில் பேணிச் செல்வதற்கு எதிர்வருங் காலத்தில் நடவடிக்கை மெற்கொள்ளப்படும். | களஞ்சிய பொறுப்பாளர் ஒருவரை நியமனம் செய்து களஞ்சியப் புத்தகங்களை பேணிச் செல்லுதல் வேண்டுமென்பதுடன், கிடைக்கப்பெறுதல், வழங்குதல் மற்றும் மீதிகள் தெளிவாக காட்டுகின்ற வகையில் குறிப்பு வைக்கப்படுதல் வேண்டும். கால ரீதியாக மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 பயனற்ற மற்றும் குறைப் பயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தில் மத்திய களஞ்சியத்தில் ரூபா. 1,279,728 ஆன தொகையிலான வெளியீடுகளின் இருப்புகள் கடந்த ஆண்டு முழுவதும் பயன்படுத்தாது குறைப் பயன்பாட்டுடன் இருந்தது. | இந்த வெளியீடுகளின் இருப்புகளை உபயோகப்படுத்தியிருப்பினும், கணக்கு வைக்கப்படவில்லை. அதற்கு தேவையான சீராக்கல்களை எதிர்வருங் காலத்தில் மேற்கொள்ளப்படும். | களஞ்சிய ஆவணங்களை செவ்வையாக பேணிச் சலெ்லுதல் வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவனத்தால் மீளாய்விற்ான ஆண்டுக்-காக பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பினும், சம்பந்தப்பட்ட பிரிவுகளில் தேவைகளை அடையாளம் காணப்பட்டு அதற்காக விரிவான பெறுகை திட்டம் தயாரிக்காமை காரணமாக கொள்வனவு செய்ய வேண்டிய உரிய பொருட்கள் மற்றும் அவற்றை கொள்வனவு செய்ய வேண்டிய உரிய காலப் பகுதிகளை அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் தேவைக-ளுக்கேற்ப பெறுகை திட்டம் பிரகாரம், பெறுகை நடவடிக்-கைகள் மேற்கொள்ளப்பட்டு- ள்ளன. | பெறுகை வழிகா-ட்டல் கோவை பிரகாரம் நடவடி-க்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |
| (ஆ) நிறுவனத்திற்கான கட்டிடம் நிருமாணிக்கும் பொருட்டு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா.171 மில்லியன் தொகை பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்-பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் அதற்கு ஏற்புடையதான பெறுகை நடைமுறை ஆரம்பிக்கப்படவில்லை. | கட்டிடம் நிருமாணிப்பதற்கு 2019 ஆம் ஆண்டில் விலை கோருதல்கள் மேற்கொண்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் ஒப்பந்தக்காரருடன் உடன்-படிக்கை கைச்சாத்திடுவத-ற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | தேவைகளை அடை-யாளம் காணப்பட்டு பெறுகை திட்டம் தயாரித்தல் வேண்டு-மென்பதுடன், அந்த திட்டம் நடைமுறை-ப்படுத்துவறத்கு செயலாற்றுதல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் பணியாற்தொகுதி 41 ஆகியதுடன், ஒரு ஊழியருக்கான செலவு ரூபா. 2,084,019 ஆகியது. அதன்படி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஒரு ஊழியருக்கான செலவு 16% ஆல் அதிகரித்திருந்தது. | ஊழியர் சம்பள வளர்ச்சி, ஊழியர் செலவு அதிகரிப்பதற்கு காரணமாகியது. | மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவு கொடுப்பன-வுகளை கட்டுப்படு-த்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் நிறுவனத்தில் 3 விரிவுரையாளர் பதவிகள் வெற்றிடமாக இருந்தன. | வெற்றிடமாக நிலவிய விரிவுரை-யாளர் பதவிகளை நிரப்புவதற்கு வருடாந்தம் விண்ணப்பங்கள் கோரிய போதும், பொருத்தமான விண்ணப்பத்தாரிகளின் பற்றாக்-குறை நிலவுவதால் வெற்றிட-ங்களை நிரப்புவதற்கு இயலாது-ள்ளது. 2019 ஆம் ஆண்டிலும் விண்ணப்-பங்கள் கோருவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ள-ப்பட்டுள்ளன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவ-டிக்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |
| (இ) 2017 ஆகஸ்ட் மாதம் 23 ஆந் திகதிய DMS/0011/PIM ஆம் இலக்க ‘‘பல்கலைக்கழக பணியாற்தொகுதியின் மீளாய்வு – 2017 முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனம்’’ என்ற தலைப்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட கடிதத்தில் 2 (iv) ஆவது பிரிவு பிரகாரம் எல்லா ஆட்சேர்ப்புகள், ஆட்சேர்ப்புத் திட்டம் | முகாமைத்துவ ஆலோசகர் பதவிகள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ ஆலோசகர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கு முகாமைத்துவ சபையின் அனுமதி 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் கிடைக்கப்பெற்றது.<br><br>ஆலோசகர்களை ஆட்சே-ர்ப்புச் செய்தல் பொதுவாக ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. | முறையான ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு நிரந்தர பணியாற்-தொகுதியை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

பிரகாரம் மேற்கொள்ள வேண்டுமெனவும், அவ்வாறான திட்டங்கள் இல்லையெனில் புதிய ஆட்சேர்ப்புத் திட்டங்களை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளுதல் வேண்டுமெனவும், குறிப்பிடப்பட்டிருந்தது. சிரேஷ்ட முகாமைத்துவ ஆலோசகர் மற்றும் முகாமைத்துவ ஆலோசகர் பதவி-களுக்கு ஏற்புடையதாக அவ்வாறு தயாரிக்கப்பட்ட முறையான ஆட்சேர்ப்பு திட்டம் இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் மேற்படி கடிதம் பிராகரம் 12 முகாமைத்துவ ஆலோசகர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 1996 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அப் பதவிகளின் பொருட்டு நிரந்தர அலுவலர்களை நியமனம் செய்வ-தற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது ஒப்பந்த அடிப்படையின்மீது 12 ஆலோசகர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | கல்விசாரா பணியாற்தொகுதியல் உதவி நூலகர் நிரந்தர பதவிக்கு பொருத்தமான அலுவலரை நியமனம் செய்யாது 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஒப்பந்த அடிப்படையின்மீது அலுவலரை ஆட்சேர்ப்புச் | உதவி நூலகர் பதவியை நிரப்புவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை மெற்கொள்ளப்படும். | நிரந்தர அலுவல-ர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடி-க்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஈ) கல்விசாரா பணியாற்தொகுதியின் பொது மக்கள் தொடர்பாடல் அலுவலர் பதவியும், முகாமைத்துவ உதவியாளர் பதவியில் 03 வெற்றிடங்களும், சாரதி பதவியில் 02 வெற்றிடங்களும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்திருந்த 06 அலுவலர்களைக் கொண்டு நிரப்பப்பட்டிருந்தது. | சாரதி பதவியில் 02 வெற்றிடங்களை நிரப்-புவதற்கு ஏற்புடையதாக நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய பதவிகைள நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்-ளப்படும். | துரிதமாக ஆட்-சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு பணியாற்றப்படும். |

## 3.6 வாகன முறைமை முகாமைதர்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 13/2015-ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு புறம்பாக நிறுவனத்தின் பணிப்பாளருக்கு மாதமொன்றுக்கு உரித்தாக வேண்டிய எரிபொருள் அளவினை விஞ்சி மீளாய்விற்கான ஆண்டில் 12 மாதங்களின் பொருட்டு 1,370 லீற்றருக்கு ரூபா. 160,225 செலவிடப்பட்டிருந்தது. | பணிப்பாளர், நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றலுவலராவதால் பல்வேறு கடமை-களின் பொருட்டு ஈடுபடுவ-துடன், அதன்படி எரிபொருள் எல்லை விஞ்சியுள்ளது. பணிப்பாளரால் பயன்படுத்திய மோட்டார் வாகனம் பயனுள்ள ஆயட்காலத்தை கடந்துள்ளமையும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்தல் குறைவ-டைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் பணிப்பாளர் அவர்களிடம் உத்தியோகபூர்வ வாகனம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி எரிபொருள் எலலையை விஞ்ஞாதிரு-ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றுநிருபம் பிரகா-ரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறைகளும் நள்ளாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகள் 2019 ஆம் அண்டு பெப்ருவரி 28 ஆந் திகதி சமரப்பிக்கய்பபட வேண்டுமாயினும், அதற்கு முரணாக நிறுவனத்தால் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 அந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | கணக்கு ஆண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் அதிபதியிடம் நிதிக் கூற்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 4.2 கணக்காய்வு குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டுக்காக ஒரு கணக்காய்வு குழு கூட்டம் மட்டும் நடாத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்காக புதிய விதிக்கோவை தயாரித்தமையால் முகாமைத்துவ சபைகளின் உறுப்பினர்களை நியமனம் செய்தல் தாமதமடைந்ததுடன், அதன்படி கணக்காய்வு குழுவிற்கு உறுப்பினர்களை நியமனம் செய்வதில் தாமதங்களும் ஏற்பட்டது. 2019 ஆம் ஆண்டில் உரியவாறு 4 கூட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றுநிருபம் பிரகாரம் ஆக்ககுறைந்தது ஆண்டொன்றுக்கு 04 முகாமைத்துவ குழுக்களை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 4.3 நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம்'' ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய போதும், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு | நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அதற்கான சுட்டிகள் என்பன எதிர்காலத்தில் தயாரித்து அதன்படி செயலாற்றுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ள்பபடும். | நிலையான அபிவிருத்தி மற்றும் இலக்குகளை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். |

நிறுவனத்தால் தமது விடயவெல்லைக்குள் வருகின்ற அலுவல்கள் தொடர்பில் எவ்வாறு நடைமுறைப்படுதல் வேண்டுமென்பது தொடர்பாக போதியளவில் புரிந்துக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்-படவில்லை. அதன்படி ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரல் பிரகாரம் நிறுவனத்தின் அலுவல்களுடன் தொடர்புடைய நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகளை அடைந்துக்கொள்வதற்கான திருப்பங்கள், இலக்குகள் அடைந்துக்கொள்வதனை அளவிடுவதற்கான சுட்டி-களையும் நிறுவனத்தால் அடையாளம் காணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.